

# ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில்

# மற்றொரு பாதாள குழி

## சாலை முற்றாக மூடப்பட்டது

*கோலாலம்பூர், ஆக. 29-*

*தலைநகர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இரண்டாவது பாதாள குழி தோன்றியதைத் தொடர்ந்து அப்பகுதி முழுவதும் பொதுமக்களுக்கு மூடப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 23 ஆம் தேதி ஓர் இந்திய பிரஜையான விஜயலட்சுமி விழுந்து காணாமல் போன பாதாள குழியிலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் அந்த இரண்டாவது பாதாள குழி ஏற்பட்டுள்ளது.*

விஸ்மா ஹனிஃபா முன்புறமிருந்து அச்சாலை முழுவதுமாக தற்போது மூடப்பட்டுள்ளது. மிகவும் பரபரப்பான ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் வியாபாரமும் தற்போது அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் கடைகள் திறந்த வண்ணமே உள்ளன.

அச்சாலை முழுவதும் கண்காணிப்பிற்காக போலீஸ் அதிகாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். பாதாசாரிகள் அங்கு நுழைவதற்கு தடை செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் பலர் அங்கு வந்த வண்ணமாகவும் அங்குள்ள இருக்கைகளில் அமர்ந்த வண்ணமாகவும் இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விஜயலட்சுமி விழுந்து காணாமல் போன இடத்திற்கு அருகே மற்றொரு பாதாள குழி ஏற்பட்டிருப்பது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போலீஸ் படை தலைவர் டான்ஸ்ரீ ரசாருடின் ஹுசேன் நேற்றுக் காலை 11.35 மணியளவில் சம்பவ இடம் வந்தடைந்தார். கோலாலம்பூர் போலீஸ் தலைவர் டத்தோ ருஸ்டி முகமட் இசாவுடன் அவர் அந்த இரண்டாவது பாதாள குழியை பார்வையிட்டார்.

புதிதாக ஏற்பட்ட பாதாள குழிக்கு அருகே பூமியை ஊடுருவிச் செல்லக்கூடிய மற்றொரு ராடார் கருவி வைக்கப்பட்டிருந்தது. முதல் பாதாள குழிக்கும் இரண்டாவது பாதாள குழிக்கும் இடையே உள்ள நகைக்கடை ஒன்றில் ஊடகவியலாளர்கள் குவிந்துள்ளனர்.

புதன்கிழமை இரவு பெய்த கடுமையான மழையே இந்த இரண்டாவது பாதாள குழிக்கு காரணம் என நம்பப்படுகிறது. மழையின் காரணமாக புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு விஜயலட்சுமிக்காக தேடும் நடவடிக்கையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் நேற்று ஆறாவது நாளாக தேடும் படலம் தொடர்ந்தது.

இதனிடையே, கோலாலம்பூரில் அண்மைக் காலமாக நிகழும் அசம்பாவிதங்கள் குறித்து ம.சீ.ச. இளைஞர் பிரிவு கவலை தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட 8 மீட்டர் ஆழ பாதாள குழி மற்றும் அங்கிருந்து சுமார் 50 மீட்டர் தூரத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலையில் ஏற்பட்ட மற்றொரு பாதாள குழி தொடர்பில் ம,சீ.ச. கருத்துரைத்தது.

### தொடரும் அசம்பாவிதங்கள்

மாநகரின் மையப்பகுதி பாதுகாப்பானது என்ற உறுதியை கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரி அளித்திருக்கும் போதிலும் அப்பகுதியில் அடிப்படை வசதி சம்பந்தப்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்கின்றன என்று அக்கட்சியின் தகவல் பிரிவு தலைவர் மைக் சோங் இயூ சுவான் கூறினார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் இப்பிரச்சினைகளின் அவசரத்தை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஆதாரம் இல்லை என்பதை காரணம் காட்டி ஆக்கப்பூர்வமான தீர்வை கண்டுபிடிக்காமல் இதனை அலட்சியம் செய்யக்கூடாது என்று அவர் கருத்துரைத்தார். அவரின் இது தொடர்பான





**மாநகரின் மையப்பகுதி பாதுகாப்பானது என்ற உறுதியை கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரி அளித்திருந்த போதிலும் அப்பகுதியில் அடிப்படை வசதி சம்பந்தப்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்கின்றன**

அறிக்கையை இணைய ஏடு ஒன்று வெளியிட்டுள்ளது.

நாட்டில் இன்று கோலாலம்பூர் மாநகர் மையப்பகுதியே மிகவும் பாதுகாப்பற்ற ஒரு பகுதி என சமூக வலைத்தளங்களில் செய்தி பரவி வருவது குறித்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவர் கூட்டரசுப் பிரதேச ம.சீ.ச. இளைஞரணி தலைவருமாவார். எந்த நேரத்திலும் ராட்ஷச பாதாள குழி உருவாகலாம் என்று கூறப்படுவதை மைமுனா மறுத்துள்ளார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் அருகில் உள்ள ஆலயம் ஒன்றுக்குச் செல்வதற்காக அவ்வழியே நடந்துகொண்டிருந்த விஜயலட்சுமி சற்றும் எதிர்பாராத வகையில் அங்கு ஏற்பட்ட 8 மீட்டர் ஆழ பாதாள குழியில் விழுந்து காணாமல் போனார்.

நிலத்தடியில் கடுமையான நீரோட்டம் மற்றும் ஆபத்தான சூழ்நிலை காரணமாக தீயணைப்பு மீட்புப் படையினரின் பணிக்கு அங்கு இடையூறு ஏற்பட்டது. முக்குளிப்போர் பயன்படுத்தப்பட்டனர். மற்ற நவீன கருவிகளையும் கொண்டு சாக்கடை கால்வாயில் தேங்கியிருந்த குப்பைக் கூளங்கள் அகற்றப்பட்டன. அப்படியும் விஜயலட்சுமி பற்றிய எந்த தடயங்களும் கிடைக்கவில்லை.

விஜயலட்சுமிக்காக தேடும் நடவடிக்கை தொடரும் அதே சமயம், ஆங்காங்கே ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. நேற்று கம்போங்





விஜயலட்சுமி

கெரிஞ்சியில் சாலையில் மிகப்பெரிய பாதாள குழி ஏற்பட்டது குறித்து சோங் கருத்துரைத்தார்.

கடந்த மே மாதம் மிகப்பெரிய மரம் ஒன்று ஜாலான் சுல்தான் இஸ்மாயிலில் வேறோடு சாய்ந்து, அங்குள்ள வாகனங்களுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. மேலும் பஸ் நிலையம், மோனோரயில் பாதையும் சேதமடைந்தன.

மிக சமீபத்தில் வார்டிபன் முகாம் அருகே ஜாலான் கெந்திங் கிள்ளானில் தடுப்புச் சுவர் ஒன்று சரிந்து விழுந்தது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என மலேசிய பொறியியல் நிபுணர்கள் கழகம் கூறியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகஸ்ட் 21 முதல் அப்பகுதியில் தொடர்ச்சியாக பெய்த மழையின் காரணமாக அந்த தடுப்புச் சுவர் சரிந்தது. இதையடுத்து அருகிலுள்ள தாமான் பூங்கா ராயாவில் 17 வரிசை வீடுகளிலிருந்து 52 குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று சோங் தெரிவித்தார்.

### ஆக்கப்பூர்வமான நடவடிக்கை அவசியம்

தொடர்ச்சியாக இதுபோன்று கடுமையான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஆகவே இதைக்கூட கருதாமல் டி.பி.கே. எல். பாதுகாப்பிற்கு உறுதியளித்திருப்பது போதுமானதல்ல. மிகவும் விரிவான ஓர் அறிக்கையை அவர்கள் வெளியிடுவது அவசியமாகும். அதில் வரைபடங்கள் உள்ளிட்ட எல்லா விவரங்களும் துல்லிமாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

சிறிய குழிகள், கால்வாய் பிரச்சினைகள் உட்பட அடிப்படை வசதிகள் சம்பந்தப்பட்ட மற்ற சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் மேலும் ஆக்கப்பூர்வமான அணுகுமுறையை அவர்கள் கையாள வேண்டும். இதற்கு டி.பி.கே.எல். முக்கியத்துவம் செலுத்த வேண்டும் என அவர் ஆலோசனை கூறினார்.

மேலும் உயர்தர, முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தில் டி.பி.கே.எல். முதலீடு செய்ய வேண்டும். அப்போதுதான் கோலாலம்பூரில் அடிப்படை வசதிகளை முறையாக நிர்வகிக்க முடியும்.

கால்வாய் முறைகளை அடிக்கடி பரிசோதனை செய்து, அவற்றை மேம்படுத்தினால் கடுமையான மழை நேரங்களில் மலேசியர்களுக்கு அது பேருதவியாக இருக்கும். அசம்பாவிதங்களையும் தவிர்க்க முடியும். கோலாலம்பூர் பாதுகாப்பான இடம்தான் என்பதை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கையால் மட்டுமே முடியும் என சோங் குறிப்பிட்டார்.

மற்றொரு நிலவரத்தில், துணைப்பிரதமர் டத்தோ ஸ்ரீ ஃபடிலா யூசுப் மற்றும் டாக்டர் சலேஹா இருவரும் நேற்று ஜாலான் மஸ்ஜிட் இந்தியா சம்பவ இடத்திற்கு மீண்டும் வருகை மேற்கொண்டனர்.

மாலை 4.37 மணியளவில் ஃபடிலா அங்கு காணப்பட்டார். அங்கு அமைக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை மையத்தில் அவருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் சலேஹா முஸ்தாபாவும் உடனிருந்தார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் வாகனங்கள் செல்லவும் தடை செய்யப்பட்டுள்ளது. ஜாலான் மஸ்ஜிட் இந்தியா மேபேங்க் வரை, ஜாலான் பூனுஸ் ஆகியன இதில் சம்பந்தப்பட்டுள்ளன.

அச்சாலை மூடப்படுவதை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் பிறகு இது பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும் என்றும் டாங் வாங்கி மாவட்ட போலீஸ் தலைவரான ஏ.சி.பி. சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் தெரிவித்தார்.

### வியாபாரத்தில் வீழ்ச்சி

இதற்கிடையே, பாதாள பூமி அசம்பாவிதங்கள் காரணமாக ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் வியாபாரம் அதிகமாக பாதித்துள்ளது. கடந்த சில நாட்களாகவே தங்களின் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அப்பகுதியில் கழுத்துக் குட்டை (ஸ்கார்ஃப்) வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள யானா நாசிர் என்பவர் தெரிவித்தார்.

இங்கு எல்லாமே குழப்பமாக இருக்கின்றது. எங்கள் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இன்னும் கடையை திறந்து



வைத்திருக்கிறோம். கடையைத் திறக்கவில்லை என்றால் நிலைமை மோசமாகிவிடும். எங்கள் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாது. இது எதிர்பாராத விதமாக நடந்துள்ள சம்பவம் என்பதால் எங்களுக்கு வேறு வழியில்லை என்று அவர் சொன்னார்.

எனினும் இப்பகுதியை அதிகாரிகள் முழுமையாக சோதனையிட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா ஜவுளிக்கடை நடத்தும் 58 வயது மகாதேவன் தங்கமாள் என்பவரும் இந்நிலை குறித்து கவலை தெரிவித்தார். பாதுகாப்பு கருதி பொதுமக்கள் இப்பகுதியை தவிர்த்து வருகிறார்கள் என்றே நான் நினைக்கின்றேன். பாதாள குழியில் அந்த மாது விழுந்த சம்பவத்திற்குப் பிறகு எங்கள் கடை திறந்திருந்த 12 மணி நேரத்தில் ஐந்து வாடிக்கையாளர்கள் மட்டுமே வந்து போனார்கள் என்று அவர் கூறினார்.

இந்த கவலையில் எனக்கு தூக்கமே வரவில்லை. பாதாள குழி சம்பவத்திற்கு முன்னதாக இங்கு வியாபாரம் சுறுசுறுப்பாக இருந்தது. சுற்றுப்பயணிகள் உட்பட அதிகமானவர்கள் இப்பகுதிக்கு வந்து போவார்கள். இப்போதெல்லாம் அந்த பாதாள குழியை பார்ப்பதற்காக வருகிறார்களே தவிர, கடைக்குள் வந்து பொருள் வாங்குவதில்லை என்று தமது சோகத்தை மகாதேவன் பகிர்ந்து கொண்டார்.

இங்கு சுற்றிலும் உள்ள சாலை நடந்து செல்வதற்கு பாதுகாப்பானதா என்ற கேள்வியும் இப்போது எழுந்துள்ளது என்றார் அவர்.

மற்றொரு ஜவுள் கடையைச் சேர்ந்த கலாதேவியும் இவ்வாறே கூறினார். முன்பெல்லாம் வியாபாரம் நன்றாக இருந்தது. இப்போதெல்லாம் நாள் ஒன்றுக்கு 10 வாடிக்கையாளர்களுக்கும் குறைவாகவே வருகின்றனர் என்று 38 வயதான கலாதேவி குறிப்பிட்டார்.

தற்போது ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பெரும்பகுதி வேலியிடப்பட்டுள்ளது. நிலைமை மோசமாகுவதை தடுக்கும் வகையில் போலீசார் அங்கு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.



